மேற்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற கட்டுரை

# சமயமும் சமூகமும்

### N. ஜனகன் 12 B.T.

அகிலத்து மக்களின் இகபர சௌபாக்கியம் அளிக்கும் உன்னத வழிகள் சமயங்கள். எனவே இத்தகு சிறப்புடைய வழிகளைச் சமூகத்துடன் தொடர்பு படுத்தல் சாலவும் ஏற்புடைத்து இவ்வாறு தொடர்பு படுத்துமிடத்து, சமயங்கள் தோன்றிய வரலாறு, அவை சமூகங்களிடையே பரந்த வரன்முறை, ஏற்படுத்திய தாக்கங்கள், அவற்றின் விளைவுகள், இன்றைய சமூகத்திற் சமயத்தின் நிலை என்பன போன்ற கோணங்களில் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பரிணமக் கூர்ப்பின் வழி விருத்தியடைந்த மனிதன், தனது நாடோடி வாழ்க்கையை விடுத்து ஆற்றங்கரையினிலே அரணமைக்க ஆரம்பித்ததும் தன் சிந்தனை வெள்ளத்தைப் புரளவிட்டான். மக்கட்கூட்டம் மாண்புடன் மகிழ்ந்திருக்க ஓர் அமைப்பு தேவையென்பதைத் தன் சிந்தனைச் சிறப்பினில் உணர்ந்து கொண்டான் மனிதன், அத்தகு அத்தியாவசியகாரணி மக்களின் வழியை ஒருமுகப்படுத்தி அன்பும் அமைதியும் தவழவிடுமென்பதை அறிந்து மதம் அல்லது சமயம் என்று அமைத்துக் கொண்டான்.

இவ்வாறு உதித்த மதம் மக்களிடையே பரந்த வரன் முறை அதன் சிறப்புக்கு அடிநாதமாய் அமைகின்றது. மக்கட் கூட்டங்களின் தலைப்பீடங்கள் கொடுத்த கொள்கைகளின் பிரகாரம் கூட்டத்து மக்கள் பின்பற்றவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. இதனால் இகபர சுகமளிக்கும் வெவ்வேறு மதங்கள் உருவாகின. இதனையே மணிவாசகரும் தம் திருவாசகத்தில் ஒருவாசகமாக.

"ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு — ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்கிறார் இவ்வாறு வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு புவியியற் பிரதேசங்களிலே தோன்றின. இவையெல்லாம் கூறும் கருத்து ஒன்றே அது முத்தியின்பம். இதனையே இராமலிங்க வள்ளலாரும்,

''அல்லா என்பார் சில பேர்கள்
அரன் ஹரி என்பார் சிலபேர்கள்
வல்லான் பரமண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா நிர்வாணம்
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே
அந்தப் பொருளை நாம் நினைந்து
ஒன்றாய்க் கூடிக் குலவிடுவோம்."

என்று கூறிப் போந்தார். இவ்வாறு ஒரே வழிகாட்டும் வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வலயங்களில் வெவ்வேறு அறிஞர் பெருமக்களாற் தோற்றுவிக்கப்பட்டன. மதங்கள் அவ்வத் தலைவர்கள் தோன்றிய மக்கட் சமூகத்தினராற் போற்றி வளர்க்கப்பட்டதுடன் அடுத்த மக்கட் சமூகத்தவரிடையேயும் பரப்பப்பட்டன. பரம்பலின் வேகமும் அம் மதத்துக்கான மக்களின் வரவேற்பும் பாங்கும் மதங்களின் விசாலத்தை நிலைப்படுத்தின. இவ்வாறு மக்களின் மனதை ஒரு முகப்படுத்தும் மதங்கள் சமூகத்திடையே பரந்த வரன்முறையைக் கண்டோம்.

4590.

எதனையும் அன்புவழி நின்று சாதிக்கலாம் என்பது அனைத்த மதங்களதும் ஒருதலைத்துணிவு. ஏனெனில் அன்பு உள்ளத்தில் ஊறி நின்று உணர்வின் மூச்சாக எழுகின்ற உயர்பண்பு இவ்வுலகில் அறத்தைக் காப்பது அன்பு; மறத்தை அழிப்பது அன்பு; இன்பத்தைப் பெருக்குவது அன்பு; துன்பத்தைப் போக்குவது அன்பு. அன்பின் ஆற்றலுக்கு எல்லையே இல்லை. அன்புவழி நின்றால் என்பநிலை தானேவந்தெய்தும் என்று தமது தமிழ் வேதமாம் திருமந்திரத்தில்

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''

எனும் பாவினில் வலியுறுத்துகின்றார் மூவாயிரம் ஆண்டுகள் மூலிகைகளால் உயிர்வாழ்ந்த சித்தர் திருமூலர். இதனையே தமிழ்முதுமொழி 'அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்' என்று அன்பின் திறம் அறிவித்து நின்கின்றது.

இயற்கையின் பூரிப்பில் உதித்த மக்களிடையே அன்புப் பெருக்கை ஓடவிட்டுச் சமூகத்தின் ஈடேற்றத்துக்கு வழியமைத்த மதங்கள் சமூகத்தின் பிணக்குகளைத் தீர்க்கும் பொது இடங்களாகக் கோயில்களை வைக்கவும் வழிசமைத்தன. மதங்களது மக்களிடையேயான ஆட்சி மக்கட் கூட்டத்தைச் சிறப்புடன் வாழ வழிசமைத்தது. பண்பாடு மனித நாகரீகத்தின் கண்ணாடி, இதனால் மக்கட் கூட்டத்தின் சிறப்புகளைச் சீர்தூக்கும் பாரம்பரியக் கலைகளும் பேணி வளர்க்கப்பட்டன. தமது அங்கத்தவர்களின் இகசுகங்கள் ஈந்து பரசுகத்தின் வணிகளாயமைந்த மதங்களை மக்கள் கைப்பிடித்தனர்; ஒழுகினர்.

இத்தகு மதங்கள் தமது பாரம்பரியத்தைப் போற்றிய காரணத்தால் இன்று புதியபாணி என்ற கோஷத்துடன் புதுமையை விரும்பும் புதுமை வாதிகளாற் தமது தன்மை மாறாதிருப்பினும் தன் தொடருநகர்களின் பாதை மாறும் நிலை ஏற்பட்டு வருவது கண்கூடு. இதனைத் தடுக்கப் பகுத்தறிவுப் பிரகாரம் மேற்கொண்ட பெரியார் ஈ. வெ. ராமசாமி முக்கிய இடத்தைப் பெறுகின்றார். பெரியார் ஈ. வெ. ரா. மதஙகளைப் புதிய நோக்கில் வளர்க்க முயன்றார். கோயில் உடைப்புப் பணி செய்ததினால் மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பி மக்களை மதங்களின் பக்கலிற் திருப்பிய ஈ. வெ. ரா. மதங்கள் மீண்டும் இன்று தம்மொளி பெற்றுத் தாணியில் இலங்க வழி சமைத்த மாமேதைகளுள் ஒருவர் இத்துடன் இப்பணியில், நூற்றாண்டு கண்டுவிட்ட மகாகவி சுப்பிரமணிய பாரதிக்கும் ஒரு பங்குண்டு என்பது மறுக்கமுடியாத உண்மை.

மதங்கள் சமூகங்களை வழிநடத்தச் சமூகங்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள், இவை என்றும் தளர்த்தப்பட முடியாதவை. இவற்றின் வழி ஒழுங்கும் மாக்களையும் மக்களாக்கும் தன்மை படைத்தவை. மனித சமூகஙகளிடையே பின்னிப்பிணைந்து அவர்களின் வாழ்விலும் சாவிலும் இணைந்துவிட்ட உன்னத வழிகள் இவற்றின் வாழ்வு மக்களின் வாழ்வு இவற்றின் வளர்ச்சி மக்களின் வளர்ச்சி இவற்றின் உயர்வு மக்களின் உயர்வு எனவே புதுமை புதியபாணி என்று பித்தலாட்டம் போடும் மாக்களின் மத்தியில் பழமையின் நினைவுகள் அவை தரும் இன்பவுணர்வுகள் என்றும் இனிய சுதந்தங்கள் என்ற உன்னத வழிநின்று, சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு, தகைமை சில ஞானமுக்தி பரகதியும் இறைத்து நிற்கும் மதங்களைப் போற்றி அனைத்து மக்களும் இன்புற்று வாழ்வோமாக.

''உண்மை வாழ - நீதி நிலவ - அன்பு வளர
என்றும் உழைப்போம்.''

OP 570

*With the best Compliments*

*from*

# GANESH TEXTILES

*Whole Sale & Retail Dealers in*
*All Kinds of Textiles, Fancy Goods*

81 - 83 Main Street,
COLOMBO - 11

*T'Phone : 25128*

*With the Best Compliments*

*from*

# DORAISONS

*Importers & Stockists of*
*All Electrical & Engineering Goods*

48, Bankshall Street,
COLOMBO - 11

T'Phone : 21078 - 24877

வலிமை உடையது தெய்வம் – நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம் — பாரதியார்

If you are searching for a
T. V. Set
That would give you absolute satisfaction
TRY

## 'CONTEC' COLOUR T. V.

A Master Piece in colour Television
Technology incorporating the most advanced
Black Stripe ITC Tube to give you vivid
and realistic colour T. V programme reception
37CM (14") COLOUR TV - ONLY Rs. 7750/-
One Year Guarantee.

We specialise in Repairs and After Sales Service

## LINGA ELCTRONICS LTD.

15, Sri Sangaraja Mawatha, Colombo 10.
Phone: 547962, 548627 & 548628

WITH BEST COMPLIMENTS
FROM

Grant, Kenyon & Eckhardt (Lanka) Ltd.

where
words
take
wing.

நடக்கும் பாதை நேரானுல்
நன்மைகள் உன் பின்னுல் வந்துவிடும் — சிந்தையிலிருந்து

இந்துமாணவர் மன்றம் நடாத்திய கட்டுரைப் போட்டியில்
மத்திய பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற கட்டுரை

# நவராத்திரி வழிபாடு

C. அருட்குமரன் 8 T

கன்னித்திங்களில் வளர்பிறைக்காலத்தில் பிரதமைத் திதி தொடக்கம் நவமி ஈறாகவுள்ள ஒன்பது நாட்களும் நவராத்திரிக்குரிய நாட்களாகும். இத்தினங்களில் விசேடமாகச் சக்தியையே வழிபடுகிறார்கள். சிவனும் சக்தியும் ஒன்று என்றக் கொள்கை இருந்த போதிலும் நாம் இஷ்ட சித்திகளைப் பெறும் பொருட்டு வெவ்வேறாகக் காண்கிறோம். நவராத்திரி தினத்தில் சக்தியின் அருட்பிரவாகம் வெளிப்படையாகத் தோன்றுகிறது ஒரு பிள்ளை தாயிடம் எதையும் அச்சமின்றிக் கேட்கிறது, தாய் செய்வாள் என்ற நம்பிக்கை பிள்ளைக்குண்டு. தாயும் பிள்ளைக்கெது வேண்டும் என்பதைத் தெரிந்து கொடுப்பாள்.

"தாயினும் நல்ல தலைவர்" என்று திருஞானசம்பந்தர் தாயின் சிறப்பை எடுத்துக்கூறுகின்றார்.

சக்தி எங்கும், எக்காலத்தும் நீக்கமற நிறைந்திருக்கும் காலதேச வர்த்தமானங்களைக் கடந்தது. ஆயினும் நமது அறிவுக்குச் சிற்சில இடங்களில் சிற்சிலக் காலங்களில் புலப்படும், புரட்டாதி மாதம் கார்கால ஆரம்பம். நிலமகள் பூரிப்படைகின்ற காலம் மரம், செடி, கொடிகள் தளிர்த்துப் பூக்கின்ற காலம் பார்மகள் பச்சைப்பசேலெனக் காட்சி தருவாள். உலக மக்கள் உள்ளம் உவப்படையும் காலம். அதனால் இந்தக் காலத்தில் ஒன்பது நாட்களை நவராத்திரிக்கென ஒதுக்கியுள்ளார்கள், இவ்விழா இல்லங்களிலும் ஆலயங்களிலும், கல்லூரிகளிலும் வேறு பொது நிறுவனங்களிலும் கொண்டாடப்படுகிறது. பூரண கும்பம் வைத்து அதில் சக்தியை ஆவாகனம் பண்ணி, அலங்கரித்து நைவேத்தியம் படைத்து தோத்திரம் பாடி வழிபடுகிறார்கள். ஆலயங்களில் உருவச்சிலைகளில் எவ்வாறு விக்கிரகங்களை எழுந்தருளச் செய்கிறார்களோ அதேபோல பூரண கும்பத்தில் சக்தியை எழுந்தருளச் செய்கிறார்கள்.

உலக வாழ்வை நடத்துவதற்கு வீரம் இன்றியமையாதது. வீரமுடையவனே சிறந்தவனாகவும் தலைவனாகவும் மதிக்கப்பட்டான். முற்காலத்தில் வீரமுடையவர்களையே பெற்றோர்கள் தமது மகளுக்கும் திருமணஞ் செய்து கொடுத்தார்கள். ஏறுதழுவுதல் போன்ற வைபவங்கள் வீரனைத் தேர்ந்தெடுக்கும் வைபவங்களாக அமைந்தன. வீரத்தைப் பெறும் பொருட்டு சக்தியைத் துர்க்கை வடிவத்தில் கண்டு வழிபட்டனர். அவளுடைய வாகனம் சிங்கம். அவள் சர்வ உலகத்தையும் தன் ஆணைக்குட்படுத்துகிறாள். கையில் வாள் ஏந்துகிறாள். இயற்கை நடைமுறைக்கு மாறாகிப் போகும் மனிதர்கள் இயற்கைத் தாயிடம் பலியாகின்றார்கள், ஆணவமுடையவர்கள் பாழடைகின்றார்கள். துர்க்கை சிவப்பு நிற வஸ்திரம் அணிந்திருக்கின்றாள். சிவப்பு நிறம் இராஜத குணத்திற்குரிய நிறமாகும். இராஜத குணத்தால் ஆளும்தன்மையும், வீரமும் பிறக்கிறது. நாம் இவற்றைப் பெறுவதற்கு துர்க்கையை வழிபடுவது முதல் மூன்று நாட்களும் ஆகும்.

இந்த இராஜத குணத்தைத் தாமத குணம் வெற்றி கொள்கிறது. அதனால் செல்வத்தை மனம் நாடுகிறது. பணம்தான் தினம் தினம் உலக வாழ்வை நடத்துவதற்கு மறைமுகமாகவும் நேரடியாகவும், போராடியும் போதனை கொடுத்தும் ஒப்பற்ற சாதனையை நிகழ்த்துகின்றது என்பது உலகறிந்த உண்மை. அதனால் செல்வத்தைப் பெறும் பொருட்டு சக்தியை இலக்குமியாக நினைந்து போற்றுகிறோம். இலக்குமி செந்தாமரையிலே வீற்றிருப்பாள். அவள் சர்வ அலங்காரப் பூஷணியாக விளங்குவாள். பதுமமலரில் வீற்றிருப்பதால் பதுமநிதியாயினள். நாம் தர்மம். ஆரோக்கியம், இன்பம் முதலியவற்றை வேண்டி இறைவனைப் போற்றி நிற்பது அடுத்த மூன்று நாட்களும் தாமத குணத்தில் நிற்பவர்களுக்கு சாத்வீகக் குணம் உண்டாகின்றது.

இன்பங்கள் நிலையற்றவை என்பதைச் சாத்வீகக் குணம் உணர்த்துகிறது. கல்விக்குக் கரையில்லை. அறிவு என்பது அழிக்க முடியாத கோட்டை. "கற்கக் கசடறக் கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று ஔவை கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றார். இத்தகையச் சிறப்பு வாய்ந்த கல்வியை அருள்பவள் சரஸ்வதி. அவள் வெண்டாமரையில் வீற்றிருக்கின்றாள். கையிலே நாதவொலிமிக்க வீணையை ஏந்துகின்றாள். சங்க புலவர்களால் பேணப்பட்டமையினால் சங்க நிதியாயினள். பூசையாலும் சிற்றுண்டிகளாலும் தெய்வம் மகிழ்ந்து விடுவதில்லை. தூய்மையான உள்ளம் வேண்டும். நல்லன எல்லாம் தருவாய் தாயே என்று வேண்டுவோம். தருபவள் அவள் தயங்காது தருவாள்.

இந்துமாணவர் மன்றம் நடாத்திய கட்டுரைப் போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தை பெற்ற கட்டுரை

# சைவசமயம்

S. நக்கீரன் 4 T

மனிதனை ஒருநிலைப்படுத்துவதற்கு உலகிலேயே பல சமயங்கள் தோன்றின. அவற்றுள் சைவசமயமும் ஒன்றாகும். சைவசமயம் எங்கே எவரால் எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்று எவராலும் கூறமுடியாது. இறைவனை நாம் காண முடியாது. ஆகவே அவரின் அருள் எங்களுக்கு எப்படிக் கிடைக்கும் என்று நீங்கள் நினைக்கலாம். மின்சாரம் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அதன் ஒளி எங்களுக்குக் கிடைக்கின்றது. அதேபோல்தான் இறைவனை நாம் கருணையோடு வழிபட்டால் அருளைப்பெறலாம். இறைவன் எங்கும் இருக்கின்றார் என்கிறது சைவசமயம். இதனை உமாபதி சிவாச்சாரியார் "எங்கும் எவையும் எரியுரு நீர் போல" என வியாபித்திருக்கின்றார்.

பதிபசு பாசம் எனும் முப்பொருள்களின் உண்மையைக் கூறுவதும் சைவசமயமேயாகும். மோட்சம் அடைவதற்குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலியவற்றை உணர்த்துவதும் சைவசமயமேயாகும். பாவங்களின்றும் நம்மை விடுவிக்க வழிகாட்டுவதும் சைவ சமயமேயாகும்.

சைவசமயம் மிகவும் தொன்மைவாய்ந்தது என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதப் பெற்ற இராமாயணம், பாரதம் என்பன ஊன்று கோலாக அமைந்துள்ளன. அத்தோடு இராமாயணத்தில் வரும் சீதை, இராமபெருமான் என்போரும் சைவசமயிகளேயாவர்.

சைவசமயத்தின் சின்னங்களாக விளங்குவன விபூதி, உருத்திராட்சம், திருவைந்தெழுத்து என்பவையாகும்.

"சித்தம் ஒருக்கிச் சிவாய நமவென்று
இருக்கினமெல்லாம் அத்தன் அருள் பெறலாமே
அறிவிலாப் பேதை நெஞ்சே"

என்கிறார் அப்பர்சுவாமிகள். பிறவித் துன்பத்திலிருந்து நீங்க உதவுவதும் சைவசமயமாகும். ஐம் புலன்களை அடக்கிப் பிறவித் துன்பத்திலிருந்து நம்மை நீக்கி இறைவனோடு சேர்க்க வல்ல கோவில் களும் பல உள்ளன. கொலை, கொள்ளை, புலாலுண்ணல், மது அருந்துதல் முதலிய பாதகச்செயல்கள் சைவ சமயத்திலிருந்து வன்மையாகக் கண்டிக்கப்படுகின்றன. மற்றும் பொய் பேசுதல் என்பனவும் சைவ சமயத்திலிருந்து வன்மையாகக் கண்டிக்கப்படுகின்றன.

எனவே சைவசமயிகளான நாம் பிறவித்துன்பத்திலிருந்து நம்மை நீக்கவல்ல சைவசமய நெறிகளைப் பின்பற்றி பேரின்ப மயமான சிவனை அடைவோமாக.

"முத்தி இன்பம் பெற்றிடவே
முயன்றிடுவோம் வாரீர்"

With the Best Compliments

from

# STATE BANK OF INDIA

With over 100 years of Service in Sri Lanka.

Main Branch & Foreign Currency Banking unit
16, Sir Baron Jayatilaka Mawatha
COLOMBO - 1.

Anuradhapura Branch
396/10 Bandaranaike Mawatha
ANURADHAPURA.

*With Best compliments*

*from*

# R. K. MANICKAM & SON

82, 4th Cross Street,
COLOMBO - 11.

T'Phone: 24092

அவன் பெயரைச் சொல்லி கடமையைச்செய்
அதன் விளைவுகளை அவனுக்கே அர்பணம்செய் — ஸ்ரீ ஹரிதாஸ்

*With the Best Compliments*

*from*

# SRINIVASANSCO LTD.

*EXPORTERSOF SRI LANKA PRODUCE & PRODUCTS*
*IMPORTERS AGENTS & REPRESENTATIVES*

**102, 2nd Floor,**
**Prince Street,**
**COLOMBO 11,**

**Cable : 'CRYSTAL'**

**T'Phones : 24843, 548313**
**Telex : 21244 & 21859**

WITH BEST COMPLIMENTS

FROM

# AIR EXPRESS INTERNATIONAL SERVICES LTD.

**TRAVELS & TOURS**

99A, Ist CROSS STREET,
COLOMBO 11.

T'Phone : 32528

மதத்தில் பற்றுவை - ஆனல்
மதத்தால் மனிதனைப் பிரிக்காதே — சிந்தையிலிருந்து

WITH BEST COMPLIMENTS
FROM

## O. A. PARAMASIVAN PILLAI & SON

General Merchants & Commission Agents

**No. 128, 4th Cross Street,**
**COLOMBO 11.**

*With Best Compliments*

*from*

# A WELL WISHER

தெய்வம் பல பல சொல்லிப் - பகைத்
தீயைவளர்ப்பவர் மூடர் — பாரதியார்

## With the Best Compliments

from

# WATERMAN STEAMSHIP CORPORATION

FAST, DIRECT SHIPPING SERVICE TO U. S. A.
Local Agents

## AITKEN SPENCE SHIPPING Co., Ltd.

13, Sir Baron Jayatilleke Mawatha,
COLOMBO - 1


எனைத்தானும் நல்லவை கேட்டு அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். குறள் — 416

# அன்பர் மொழிவாசகம்

சைவமணி, சித்தாந்தச்செம்மல் வித்துவான்
மு. சபாரத்தினம் அவர்கள்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாந் திருமுறையில் அடங்கிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு பெரு நூல்களும் மணிவாசகப் பெருமானால் அருளிச் செய்யப் பட்டவை. திருவாசகம் மணிவாசகப் பெருமானின் அயரா அன்பின் முதிர்ச்சியைப் புலப்படுத்த, திருக்கோவையார் அவர்தம் செந்தமிழ்ப் புலமையைத் தெற்றெனத் தெளிவு படுத்துகின்றது. திருவாசகம் தெவிட்டாத தேன் போன்றதெனின், திருக்கோவையார் அத்தேனிடை ஊறிய தெய்வநலம் பொலியும் செந்தமிழ் அமிழ்தம் போன்றதாகும்.

திருவாசகமானது தன்னகத்தே கொண்டுள்ள அழகிய பாடல்களினால் அறியாமை, பேராசை முதலான அடிமைத் தளைகளின்று விடுபட்டு, அன்பு, அறிவு, அடக்கம் என்பனவற்றின் உரிமை பெற்று படிப்படியாக 'உயர்ந்து செல்லும் உயிர்களின் முன்னேற்றத் தன்மைகளை விளக்கமாகக் காட்டுகிறது. உயிரின்கண் முதலில் தோன்றும் உணர்வுக் கண்கள் திறக்கப் பெறுதல், அதனாற் பிறக்கும் உவகை பெருமிதம், பல்வேறு மன நிலை அலைவுகள், உலகியலில் நின்று தடுமாறும் போராட்டம், அமைதியின்மை, இறுதியாக இறைவனை எய்திப் பெறும் பேரின்பம் ஆகிய பல்வகை உணர்ச்சிகளும் திருவாசகத்தில் தெளிவாகக் காணப்படுகின்றன என்று தத்துவப் பேரறிஞர் இராதாக் கிருஷ்ணன் அவர்களும், மேலைநாட்டறிஞர் ஜி. யு. போப்பையர் அவர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

எல்லாம் வல்ல பரம்பொருளே "பாவை பாடிய வாயால் கோவை பாடுக"– என மணிவாசகரிடத்தில் கேட்டுப் பெற்ற சிறப்புடைய ஒப்புயர்வற்ற நூலே சிற்றம்பலக் கோவையார். சங்ககாலப் புலவர்களால் பாடப்பெற்ற அகப்பொருள் ஆகிய உடலில், இறைவனின் இயல்பு, உயிர்களின் தன்மை, இன்பநிலை ஆகிய உயிரியல் அருட்பொருளும் கலந்து அழியாத பேரின்பத்தினை அள்ளித்தரவல்ல சிறப்புடைமை குறித்தே சிற்றம்பலக் கோவையாரைக் "காமஞ் சான்ற ஞானப்பனுவல்" எனக் குமரகுருபர சுவாமிகளும் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

அகப்பொருள் நூல்களில் அமைந்துள்ள துறைகள் பலவற்றுள் "உயிர் என வியத்தல்" என்பதும் ஒன்றாகும். தலைவன் ஒரு சோலையினிடத்தே தலைவியைச் சந்தித்து அவளைச் சேர்ந்து இன்பச் சிறப்பும் பிரிவாற்றாமையும் கருதி அவளைத் "தனது உயிர்" எனப் பாராட்டி மகிழ்தல் அத்துறைக்குரிய பொருளாகும்.

அன்புடன் நேற்று என்னைக்கூடி, பின்னர் என் மனம் வருந்துமாறு பிரிந்து சென்று தோழியர் கூட்டத்தைச் சேர்ந்து, எனக்கு இன்பத்தையும் துன்பத்தையும் ஒருங்கே உண்டாக்கி, என் நெஞ்சில் நிலைபெற்றுவிட்ட என்னுயிர் இதோ வந்துவிட்டது எனத் தலைவியின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்த தலைவன் அவளைத் தன்னுயிரினும் மேலானவளாகப் புகழ்ந்து, மகிழ்ந்து கூறுகின்றான் –

"நேயத்தாய் நென்னல் என்னைப்
புணர்ந்து நெஞ்சம் நெகப்போய்
ஆயத்ததாய் அமிழ்தாய் அணங்காய்
அரன் அம்பலம்போல்
தேயத்தாய் என்றன் சிந்தையதாய்த்
தெரியிற் பெரிதும்
மாயத்ததாகி இதோ வந்து
நின்றது என் மன்னுயிரே"

எனத் தலைவன் கூற்றாக வரும் இப் பாடலில், மணிவாசகர் தமக்கு உயிர்க்குயிராக விளங்கும் சிவபெருமானின் திருவருட் செயல்களைப்பற்றிய குறிப்பும் அமையப் பாடியுள்ளார்.

''என்பால் அருள்மிகுந்து முன்னர் என்னைத் திருப்பெருந்துறையில் தடுத்தாட்கொண்டு, பின்னர் என் நெஞ்சம் கலங்கி வருந்தும்படி, ''நீ தில்லைக்கு வருக'' எனக் கூறி, அடியவர் கூட்டத்தோடு பிரிந்து சென்று நினைக்குந்தோறும் அமிழ்தம் போலும் இன்பஞ்செய்து, வெளிப்படாது மறைந்து நிற்றலின் துன்பஞ்செய்து, பொன்னம்பலம் போல் ஒளிமிகுந்து என் சிந்தையில் நீக்கமற நிலைபெற்று, இங்ஙனமெல்லாம் திருவிளையாடல்கள் நிகழ்த்துதலால் மாயத்தன்மை பொருந்தி என்னை இயக்கி ஆட்டிப் படைக்கும் என் உயிர்க்குயிரான 'சிவம்' இதோ வந்து தோன்றி நிற்கின்றது - என வேறோர் சிறந்த உட்பொருளும் இச்செய்யுளினிடத்துப் பொருந்தி விளங்குதலைக் காணலாம்.

"எண்கனகத்தாய், உயிர்க்குயிராணய் எம்பெருமான்
பள்ளி எழுந்தருளாயே" - எனவரும்

திருப்பள்ளியெழிச்சி அடிகளும் ஈண்டு ஒப்பிட்டு உணர்ந்து இன்புறத்தக்கது. இங்ஙனம் பல அரிய நுண்ணிய முறைகளில் அகப்பொருளில் அருளையும் ஒருசேரக் குழைத்தளிக்கும் பெருஞ் சிறப்பினையுடைய அன்பர் மொழிவாசகமாகிய சிற்றம்பலக் கோவையாரை நாம் அனைவரும் உண்மையான பக்தியோடு ஓதியுணர்ந்து இம்மை மறுமை இன்பங்களைப் பெற்றுய்வோமாக.

வணக்கம்.


*With the Best Compliments*

*from*

# K. SELVARAJAH & CO.

*Importers & Exporters*

*General Merchant & Commission Agents*

No. 204, Gas Works Street,
COLOMBO 11.


அறத்தினுங் காக்கமுல்லை யதனை
மறத்திலினுங் கில்லைக் கேடு — குறள்

**With the Best Compliments**

**from**

❋

# ANNALACKSHMI GOLD HOUSE

**Jewellers & Gem Merchants.**

Articles are all Guaranteed and Genuine

**137 Sea Street**

**Colombo - 11.**

**With the Best Compliments**

**from**

❋

# NEW HOPE

**Colour Processing & Printing**

**No. 12, Lower Parson Road,**

**COLOMBO – 2.**

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை
— இருள்சேர்ந்த இன்னாவுலகம் புகல் — குறள்

*With the Best Compliments*

*from*

# VILASINI & CO.

148, KEYZER STREET,

COLOMBO 11.

With the Best Compliments

from

# GANI EXPORTERS

19 & 21 Grandpass Road,

COLOMBO - 14.

T. Phone 25603

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு — குறள்

# நெஞ்சு பொறுக்குதில்லையே...!

**தெட்சணாமூர்த்தி குகன்**

இல்ல மெல்லாம் கொலு வைத்து இறைவனையும் இறைவியையும் வழிபடும் இத்தினத்தில் இதயத்தில் எழுந்த சில எண்ணங்களை, இதயத்தைஅரித்திடும் எண்ணங்களை இயற்றிட விரும்புகின் றேன். இவ்வுலகில் பரந்துள்ள சமயங்களில் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது நமது இந்துசமயம் என்று நாம் மார் தூக்கிச் சொல்லலாம் நாம் எல்லாம் இந்துக்கள் என்று சொல்லித் திரிவது. மாத்திரம் இந்துக்கள் என்றாகிவிடாது. ன்றேல் காலையும் மாலையும் ஒருமணி நேரம் கடவுளை வணங் குவதனால் மாத்திரம் பெரிய சமய பக்தர்கள் ஆகிவிடமாட்டோம் உள்ளக் கமலத்தைத் தான் இறைவன் வேண்டுகின்றான். 'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்' என்ற நோக்கத்தில் இல்லாது. ''படிப்பது தேவாரம் பகர்வது அன்புள்ளம்'' என்ற மார்க்கத்தில் நாம் செயற்பட வேண்டும்.

நாகரீகம் வளர்ந்து அதன் உச்சக்கட்டத்தை அடைந்து அநாகரீகத்தை. நோக்கிச் செல்லும் காலகட்டம் இதுவாகும் இக்காலகட்டத்திலே சமயமும் நம்மில் சிலருக்கு பகடைக் காய்களாகப் போய்விட்டது என்பதற்கான சானறாக இப்போசில இளம் பெண்கள், இளைஞர்கள் போன்றோர் நடக்கின்றார்கள் நமது சம்யத்தின் முக்கிய சின்னங்கள் விபூதியும், உருத்திராக்கமும் ஆகும். விபூதியை உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் அணிதல் வேண்டும் என நாம் பலதடவை படித்திருக்கின்றோம். படித்திருந்தும் என்னபயன்? இன்றைய கன்னியர் பலரும் காளையர் சிலரும் விபூதியை அழகுசாதனமாக, தமது அழகைக்கூட்டும் சாதனமாக. பயன்படுத்துகின்றார்கள் என்பதைக்கண் கூடாகக் காணும்போது நெஞ்சை ஏதோ செய்கின்றது. திருநீறு அணியும் போது நீள, அகல பரிமாணங் களைப்பார்த்து ஒரு சிறிய குறியாகவோ. அன்றேல் இருகுறியாகவோ வைத்தல் சில இளைஞர்களது வழக்கம் இவ்வாறு வைத்து அத்திருநீற்றுக் குறியின் மீதோ அல்லது சற்றுக்கீழோ பொட்டு வைத்து முகத்தை அழகு படுத்துவது பல இந்து யுவதிகளின் பழக்கமாக இருக்கின்றது. திருநீறு சிவசின்னங்களில் முக்கியமான ஒன்று இதனை இவ்வாறு அழகுசாதன மாக்குவது எமது சமயத்தின் புனிதத்துவத்தைக் கெடுப்பதாக அமையும்.

இன்று எமது இந்துசமயத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் ''நான்சாமி, கும்பிடறயில்ல'' என்றும் ''எனக்கு ஒரு தேவாரமும் தெரியாது'' என்றும் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். இவற்றை அவர்களில் அநேகர் நாகரீக மாகக் கருதுகின்றார்கள்; கிறிஸ்தவ. இஸ்லாமிய சமயத்தவர் களை, நாம் அவதானித்தோ மேயானால் இப்படியான அவர்கள் மதம்சம்பந் தப்பட்ட உரையாடல் களை கேட்பது மிகக் கடினமாகும். அவர்கள் தமதுமதங்கள் மீது வைத்திருக்கும் மதிப்பு, பக்தி ஏன் எம்மில் பலருக்கு இல்லாமல் போகின்றது? நம்மாணவர்கள், இளைஞர்கள் இக்கேள்வியை மனதில் கொண்டு எமது இந்து மதத்தில் பற்றுவைக்க வேண்டும் ஏனெனில் எமது இந்து மதம் மனிதன் கட்டுப்பாடு, ஒழுக்கம் நேர்மை. என்பவற்றுடன் வாழ்வதற்கு விசேடமான வழிமுறைகளைக் கூறு கின்றது இதன் காரணமாக இந்துமதக் கொள்கை யினை, சைவசமயக்கொள் கையினை, நம் மாணவர் கள், இளைஞர்கள், யுவதிகள் கடைப்பிடிப்பார்களேயானால் அவர்களிடம் காணப்படும் ஒழுக்க மின்மை அமைதி யின்மை என்பவற்றை வெகுவாகக் குறைக்கலாம் என்பது நிச்சயமான தொன்றாகும்.

பாரதியார் நூற்றுண்டை பார் எங்கும் பரந்த அளவில் எல்லோரும் கொண்டாடுகின்றேம். பாரதியார் சிந்தனைகளை, பாடல்களை மேடை, மேடையாக முழங்குகின்றேம் ஆனுல் நமது நாட்டில் சில பகுதிகளில் ஆன்மாவை, லயப்படுத்தும் ஆலயத்தில், இறைவனின் இல்லமாகிய கோவிலில் சில பகுதி மக்களை அனுமதிக்காமல் வேறுசில மக்கள் பகுதி தடுக்கின்றது இதற்கு அவர்கள் கூறும் காரணம் ''அவர்கள் சாதிகுறைந்தவர்கள் அவர்களால் எமது கோயிலிற்குள் வரமுடியாது'' என்பதாகும் இங்கு இவர்கள் கோயில் பொதுச் சொத்து என்பதை மறந்து விடுகின்றுர்கள் மேலும் அவர்கள் குறிப்பிடும் சாதி எங்கிருந்து வந்தது என்பதை நோக்குவோமானுல் அவர்களின் தொழில்களை அவர்களின் சாதியாக வகுக்கப்படுவதை நாம் அவதானித்துள்ளோம். ஆனுல் எமது சமயத்தில் வேடுவ இனத்தைச் சேர்ந்த, ஊன் உண்ணும், இறைவனுக்கும் இறைச்சி படைத்த. இழி குலத்தவனுகிய கண்ணப்ப நாயனுரிற்கு இறைவன் அருள்புரிந்ததைப் பற்றிநாம் படித்திருக் கின்றேம், அறிந் திருக்கின்றேம். இவற்றை எல்லாம் நாம் சிறிது சிந்திப்பது அவசிய மல்லவா? ஆனுல் சாதிக் கொடுமை, கோயில் பிரவேசத்தடை என்பன, சிறிது சிறிதாகக் குறைந்து வருவது ஒருநல்ல செய்தியாகும்.

மேலும் நம்மில் சில பெண்களும் பெரியவர்களும் கோவில்களில் ''ஊர்வம்பு'' கதைப்பதை, நாம் கண்டு, கேட்டுஇருக்கின்றேம். அத்தோடு பெண்கள் கோயிலுக்கு வரும் மற்றையபெண்களின் சேலை நகை போன்றவற்றையே அவதானித்து அவைபோலத்தாமும் வாங்க வேண்டும் என்ற நோக்கம் கொள்வதையும், வீடுவந்ததும் அவைபற்றிப் பிரஸ்தாபிப்பதையும் நாம் அவதானித்துள்ளோம் இவையெல்லாம் மனதை ஒருநிலைப் படுத்தி இறைவனை வணங்கும் கோவிலில் செய்யக்கூடிய செயல்களா? என்பதை உங்களது மனதிடமே கேட்டுப் பாருங்கள் அதுசொல்லும் 'இல்லை' என்ற சொல்லை. பின்நாம் ஏன் இவற்றில் எல்லாம் சிரத்தை கொண்டுள்ளோம்? இவை போன்ற செயல்கள் தான் எமது சமயத்தை அழிவுப்பாதைக்கு எடுத்துச் செல்ல வழிசமைக்கின்றன.

எனவே மதம் என்று "மதம்'' கொள்ளாது எமது இந்து மதத்தின் தன் மைகளை, புனிதத்தை, பாரம்பரியத்தை, புதுமை என்ற போர்வையால், நாகரீகம் எனும் மூடியால் மூடாது மற்றைய மதங்களுடன் இயைகின்ற. அவற்றேடு எல்லாம் துணைநிற்கின்ற தன்மைகளை அவதானித்து அன்பு என்ற எமது சமயத்தின் அடிநாதத்தை அடியொற்றி: அதன்மீது பற்றுக் கொண்டு அதன் கட்டுப் பாட்டின் கீழ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக!

சுபம்

With the Best Compliments

from

# RADHA TRADING CO., LTD,

25, KOTAHENA STREET,
COLOMBO 13.

T'Phone: 36860

With Best Compliments

from

# ESWARAN BROTHERS

267, Sea Street,
COLOMBO 11.
T'Phone: 32599 & 22744

*Sole Importers of :-* "MATCH BOX" TOYS
"LEGO" TOYS
Omax Swiss Wrist Watches
Super Quartz Wall Clocks

எவன் எதைச் செய்தாலும் அவன் அறிவான் - அந்த
எண்ணத்தின் தரங் கண்டு பலன் தருவான் — ஸ்ரீ ஹரிதாஸ்

Distributors for:-

❋

❋ **PARKER PENS**

❋ **SHEAFFER PENS**

❋ **EVEREADY FLASH LIGHT SELLS**

No. 99, Main Street,
COLOMBO 11.

*With the Best Compliments*

*from*

# NANDA INVESTMENT LTD.

No. 30, Albert Crescent,
COLOMBO 7.

T'Phone: 598614

With the Best Compliments

from



# HOTEL SWANEE

BERUWELA.

T'Phone: 5208 - 9 - 13

MANAGED BY HOTEL MANAGEMENT & MARKETING SERVICES

With the Best Compliments

from

# WORLD COMMUNICATION

*INTERNATIONAL TELEX & TELEPHONE BUREAU*

**437, GALLE ROAD,**

**COLOMBO 4.**

**T'Phone: 580504**

**Telex: 21938 & 21937 WORLD CE**

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு — குறள் 261

# சமயமும் மகாகவி பாரதியும்

(க. கந்தசுவாமி ஆசிரியர் ரேயல் கல்லூரி)

பாட்டுக் கொருபுலவன் பாரதி எனக் கவிமணி அவர்கள் போற்றும் பாரதி ஓர் உலக மகாகவி. அவரின் சிந்தனை ஆற்றலும் புலமை ஆற்றலும் சீரிய கோட்பாடுகளும் உலகில் ஈடு இணையற்ற ஓர் உன்னத இடத்தை அவருக்கு வழங்குகின்றன. மகாகவி பாரதியார் சிறந்த நாவலர், தேசவிடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி, சமயப்பேரறிஞர், தீர்க்கதரிசி உயர் இலட்சியங்களுக்காகத் தம் வாழ்வை முழுமையாக ஈடுபடுத்தியவர்; வாழ் வாங்கு வாழ, வழிப்படுத்தியவர், அனைத்துத்துறை அறிவு உள்ளவர், அனைத்துத் துறையிலும் பெரும்பணி ஆற்றியவர்.

மகாகவி பாரதியின் சிறந்த சிந்தனைகளும் கோட் பாடுகளும் பாடல்களாகவும் உரைந டைகளாகவும் உள. இவை நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழிகள்; தமிழுலகிற்குக் கிடைத்த அமிழ்த சஞ்சீவிகள்; தேசவிடுதலை, சமூகசீர்திருத்தம் தமிழ் மொழி, சமயம், ஆகிய பல்வகைத் துறைகளின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பயன்தந்தவை, தருபவை.

பாரதி வாழ்ந்தகாலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம், அன்று தேசவிடுதலையும் சமுகசீர் திருத்தமும் முதன்மை பெற்றன. அதனாற் பாரதியின் இவ்விருவாக்கான பாடல்களும் உரைந டைகளும் பெருந்துணையாயின பாரதியின் இவ்விருவகை ஆக்கங்களையே அறிஞர்கள் எடுத்து ரைத்தும்எழுதியும் பயன்படுத்தினர். இதனாற் பாரதியின் சமயப் பாடல்களும் சமய உரை நடைப்பகுதிகளும் அவைகளின் பயன்பாடுகளும் அறியப்படாதன ஆயின. பாரதியின் தேசவிடுதலை சமுகசீர்திருத்த ஆக்கங்கள் பற்றிய விமரிசனங்கள் பாரதியார் நாத்திகர் என எண்ணும்படி செய்தன.

பாரதி நூற்றுண்டு நிறைவுக்காகப் பலநாடுகளில் இன்று பாரதி விழாக்களும் கட்டுரைகளும் கவிதைகளும் பரந்த அளவில் இடம்பெறுகின்றன. பாரதியின் சமய ஆக்கங்கள் பற்றியும் பயன்பாடு பற்றியும் அறிஞர்கள் சிலர் வெளிப்படுத்தி உள்ளனர் இஃது இனிவரும் நூற்றண்டு களில் மகாகவி பாரதியின் ஆக்கங்களின் பயன்பாடுகளிற் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் அறிகுறி யாகும்.

தேசவிடுதலை சமுகசீர்திருத்தம் தமிழ் மொழி ஆகியவைகளுக்குப் பாரதியார் ஆற்றிய பங்களிப்பைச் சமயத்திற்கும் செய்துள்ளார், பாரதியின் ஆக்கங்களிற் சமயத் தொடர்பான ஆக்கங்களே ஏனைய பகுதிக்களுக்கான ஆக்கங்களிலும் அதிகமாக உளகண்ணன் பாட்டும் குயிற்பாட்டும் சமயதத்துவக் கருத்துக்கள் உள்ளவை தேசியம் சமூகம், பல்வகை, தனிப்பாடல் பாஞ்சாலி சபதம் ஆகிய பகுதிகளிலும் சமயக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. பாரதியின் உரைநடைப் பகுதியிலும் சமயத் தொடர்பான பகுதிகள் பல உள.

சமயத்தையும் சமூகத்தையும் பாரதி வேறு படுத்தாது சமயத்துள் சமூகத்தையும் சமூகத் துள் சமயத்தையும் கண்டார் மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே ஆகா என்றே எழுந்தது யுகப் புரட்சி எனப் புதிய ருசியாவைப் பாராட்டிய பாடலிற் பாரதி கூறியுள்ளமை சமூகத்தையும் சமயத்தையும் ஒன்றுக அவர் கண்டார் என்பதற்கு தக்க சான்றாகும். உலகின் அனைத்து தோற்றங்களையும் கடவுளின் உருவங்களாகவும் உலகின் அனைத் துச் செயல்களையும் கடவுளின் செயல்களாகவும் பாரதியார் எண்ணினர் என்பது அவரின் பாடல்களிலிருந்து தெளிவாக அறியலாம்.

பாரதியின் சமயக் கருத்துகளும் கோட்பாடுகளும் சமயத்தின் மூல உண்மைகளை ஆதார மாக உடையனவும் அனைவரும் ஏற்கத்தக்கனவும் ஆகும் உலகத்தில் இறைவனையும் இறைவனி டத்தில் உலகையும் காண்பவனே உண்மை உணர்ந்தவன். என்னும் வேத உபநிடத உண்மையை உணர்ந்து அதன்வழி பாரதி வாழ்ந்தார் என்பதைக் காக்கைச் சிறகினிலே நந்தலாலா உன்கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா எனக்கூறுவதனாலும் சக்தியைப் பற்றிக் கூறிய பல பாடல் களினாலும் அறியலாம்.

'ஒன்று பரம் பொருள்: நாமதன் பிள்ளைகள்' எனப் பாரதமாதா என்னும் பாடலிலும், நானாக என்னை உண்டாகிக் கொள்ளவில்லை தெய்வம் என்னைப் படைத்தது. அது என்னைக் காக்கிறது எனப் புதிய உயிர் என்னும் உரைநடைப்பகுதியிலும் கூறியுள்ளவை பாரதியின் உறுதி யான கடவுட் கொள்கையை உணர்த்துகின்றன.

ஒன்றே பரம் பொருள் அதனை ஞானிகள் பலவாய்க் காண்பர் என்னும் வேத உபநிடதக் கருத்தை விநாயகர் நான்மணி மாலையில் விநாயக தேவனாய் வேலுடைக்குமரனாய் நதிச்சடை முடியனாய் அல்லா எகோவா எனத் தொழுதன்புறும் தேவருந்தானாய்த் திருமகள் பாரதி உமை எனத் தேவியர் உகந்திடும் வான்பொருளாய் உலகெலாம் காக்கும் ஒருவன் எனக் கூறி உணர்த் தியுள்ளார் இவ்வுயர் உண்மையினாலேதான் விநாயகர், முருகன், சிவசத்தி, கண்ணன், கலைமகள் முதலிய உயர் தெய்வங்களையும் முத்துமாரி முதலிய சிறு தெய்வங்களையும் சூரியன், தீ முதலிய இயற்கைத் தெய்வங்களையும் வழிபாட்டிற்கு உரியனவாகப் போற்றி வகுத்துள்ளார்.

வேள்வி வழிபாட்டையும் வேதாந்தக்கருத்துகளையும் கோயிலையும் பாரதியார் பல இடங்களிற் குறிப்பிட்ட போதிலும் கோயில் வழிபாட்டையும் இறைவன், உயிர், உலகம் ஆகிய முப்பொருள் உண்மையையும் பல இடங்களிற் கூறுகின்றமையாலும் வேதாந்த சித்தாந்தக் கோட்பாடுகளிலே வேறுபாடற்ற நிலையைக் கண்ட தாயுமாணவர் வழியே பாரதியாரின் வழியும் ஆகும்.

அறம் பொருள் இன்பம் வீடெனும் முறையே தன்னையாளும் சமர்த்தெனக் கருள்வாய், எனவேண்டும் பாரதி இவைகளை அடைந்தற்காகக் கருமம், பக்தி, தவம், தியானம், யோகம், ஞானம் ஆகிய முறைகளை முன் வைத்துள்ளார் தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல் உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல் இந்நான்கே பூமியிலெவருக்கும் கடமை எனக் கரும வழிபாட்டு முறையைக் கூறிய பாரதி எதற்கும் அஞ்சாத தைரியமே உண் மையான பக்திக்கு அறிகுறி எனவும் தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம் மனிதன்தான் விரும்புகிறபடி ஆவான் எனவும், யோகத்திருத்தி விடு அல்லால் என் உயிரை மாய்த்து விடு எனவும் பக்தி தியானம், யோகம் ஆகிய நெறிகளை வழியுறுத்தி உள்ளார்.

பக்தியில்லாமற் செய்யப் பெறும் வழிபாடுகளாலும் கிரியைகளாலும் பயனில்லை எனக்கூறிய பாரதியார் பக்தியைப் பற்றிய ஏழுபாடல்களில் பக்தியினால் இப்பாரினிலே எய்திடும் மேன்மை களாகச் சித்தம் தெளிந்திடும் செய்கைகள் அனைத்திலும் செம்மை பிறந்திடும் செல்வங்கள் சேரும் சொல்லுவதெல்லாம் மறைச் சொல்லினைப் போலப் பயனுள்ளதாகும் என நாற்பது பயன்களைத் தெரிவித்துள்ளார்.

கடவுள் வழிபாட்டினால் அகக்கண் திறக்கும் ஆண்மை வலியுறும், எக்கெலாம் சென்று செயக்கொடி நாட்டலாம், விடத்தையும் நோயையும் வெம்பகைய தனையும் துச்சமென் றெண்ணித் துயரிலாதிங்கு நிலைபெற்றோங்கலாம் அச்சம் திரும் அமுதம் விளையும், வித்தை வளரும் எனப் பல்வகைப் பயன்களை விநாயகர் அகவற் பாடலிற் கூறியுள்ளார்

கடவுள் வழிபாட்டு முறைகளுள் உயிர் உடல் உடைமை ஆகிய அனைத்தையும் கடவுளுக்கு ஒப்படைத்தலே உயர்ந்ததும் சிறந்ததுமாகிய முறை எனவும் அதனால் இம்மை மறுமைப் பயன் கள் அனைத்தையும் பெறலாம் என்பதையும் பாரதியார் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார் எங்கள் இச்சைகளும், செயல்களும், துணிவுகளும் செம்மையுற்றிட அருள்வாய் நின்றன் சேவடி

அடைக்கலம் புகுந்து விட்டோம் கரணமும் தனுவும் நினக்கெனத் தந்தோம் காளி நீ காத்தல் நின் கடனே என்பன போன்ற பாடற் பகுதிகளும் ஆத்ம சமர்ப்பணபாடல்களும் இவ்வுண்மை களை வழியுறுத்துகின்றன பகவத்கீதை, சைவ சித்தாந்தம் என்பனவற்றின் முடிந்த முடியும் இதுவேயாம்.

சுத்த அறிவே சிவம் அறிவுக் கெட்டாதது பெயர் சொல்ல முடியாதது அப்பொருளுக்குத் தத் (அது) என்ற பெயர் காட்டி வேதரிசிகள் போற்றினர் தெய்வம் உண்டென்பதை உலகம் அதன் வடிவம் எனக்கடவுளின் உண்மை இயல்பையும் அடக்கம் பொறுமை சிவகாருணியம் என்னும் குணங்கள் நாகரிகத்தையும் நித்திய சிவனையும் விளக்கும் என உண்மைச் சமயி இயல்பையும் மிருக நிலையிலிருந்து மனித நிலைக்குக் கொண்டு சேர்க்க ஏற்பட்ட நிலையமே கோயில் எனக் கோயிலின் இயல்வையும் பாரதியார் விளக்கியுள்ளார்.

வேதங்களே இந்து மதத்தின் முதநூல்கள் என்பதும் புராண ஆகமங்கள் வேத உண்மை களை விளக்க எழுந்த நூல்கள் என்பதும் பாரதியாரின் கருத்து என்பதை அவரது உரைநடைப் பகுதிகளால் அறியலாம் படைத்தல் காத்தல் மாற்றுதல் அருள் செய்தல் வலியுடைமை ஒளியுடைமை முதலிய கடவுளின் பலவித குணங்களுக்கும் இயல்புகளுக்கும் தக்கபடி அவனுக்குப் பிரமா விஷ்ணு, சிவன் இந்திரன் சூரியன் அக்கினிவாயு முதலிய பலவித நாமங்களை வேதம் வழங்குகின்றது. வேதங்களின் வழிநூல்களாகிய புராணங்களிலே கடவுளை உணர்வதற்குச் சாதனங்களாகிய தவம் பக்தி யோகம் முதலியவைகளை அனுட்டிக்கும் நெறிகளும் இவ்வழியே செல்பவனுக்கு இன்றியமையாத திடசித்தம் நேர்மை முதலிய குணங்களைப் பழக்கப் படுத்தும் நெறிகளும் இக்குணங்கள் ஏற்படாதபடி தடுக்கும் கர்வம் கோபம் முதலிய அசுர குணங்களை அறுக்கும் நெறிகளும் பல திருட்டாந்தங்காலும் சரித்திரங்களாலும் உவமைக் கதைகளாலும் உபதேசங்களாலும் வித்தாரமாகக் காட்டப்பட்டிருக்கின்றன உபாசனை புரிவோர் இயல்புக ளுக்குத் தக்கப்படி புராணங்கள் தத்தம் மூர்த்தி பேதங்களைச் சிறப்பாகக் காட்டுகின்றன கால நடையில் புராணங்களை. ஆதாரமாகக் கொண்ட மதபேதங்கள் ஏற்பட்டு விட்டன வேதகல்வியும் வேதஞானமும் குன்றிப் போயின வேதம் ஒன்றையே பிரமாணமாகப் பேசிய போதிலும் நடையிலே இம்மதத்தவர்கள் தம்தம் புராணங்களையே தலைமையாகக் கொண்டு வேதத்தை மாற்றிப் பொருள் கொள்ளலாயினர் வேதத்திற் சொல்லிய மூர்த்திகளைத் தாழ்வாக மதிக்க லாயினர் ஒவ்வொரு மதப் புராணத்திலும் ஏனைய மத மூர்த்திகளை இழிவு படுத்தும் செய்தி களும் புதிய கதைகளும் கற்பிக்கப்பட்டன. எனவே இந்து மதம் சிதைவுற்று வீழ்ச்சி அடைந் தது எனப் பாரதியார் புராணங்கள் என்னும் உரைநடைப் பகுதியில் எழுதியுள்ளார்.

மகாகவி பாரதியார் எல்லா மதங்களையும் ஒரே மதமாகக் கண்டாரேனும் இந்து மதத்திற்கு உயர்வு கொடுத்துள்ளார் இந்து மதம் மண்டலத்தில் மேம்பாடு பெற்று. வாழ வேண்டின் வேதங்கள் உபநிடதங்கள் புராணங்கள் தேச மொழிகளிலே தெளிவாக மொழி பெயர்க்க வேண்டும் எனவும் புராணங்களில் இதர தெய்வங்களை வேதத்தின் உண்மைக் கருத் தைத் தக்க ஞானிகள் அறிஞர்கள் மூலம் நாடுமுழுதும் புத்தகம், பத்திரிகை, உபநியாசம் முதலிய வற்றுற் பிரமாண்டமான பிரசாரத் தொழில் நடத்த வேண்டும் எனவும் புராணங்கள் பற்றிய உரைநடைப்பகுதியில் எழுதியுள்ளார்,

மேலும் இந்து தருமம் பற்றிய உரை நடைப்பகுதியில் நூற்றுக்கணக்கான இந்து தர்மக் கொள்கைகளை உலகத்தார் கேட்க நாம்முழுங்குவதற்கு இது நல்ல தருணம். இந்தச் சமயத்தில் மனிதசமூகம் அழிந்து போகாமல் காப்பாற்றி நல்ல வழியில் சேர்க்கக் கூடிய சாதியான நம்மைத் தவிர வேறு யாரும் இல்லை இந்த விடயத்தை ஆழ்ந்து யோசனை பண்ணி இங்கிருந்து வெளி நாடுகளுக்கு நூற்றுக் கணக்கான பிரசங்கிகளை அனுப்பும்படி ராஜாக்களையும், ஜமின்தார்களையும், செட்டிமார்களையும் மடாதிபதிகளையும் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன் என எழுதியுள்ளார்.

பல மூர்த்திகளைப் பாரதியார் துதித்துப் போற்றின ரேனும் சக்திக்கு முதன்மை கொடுத் துள்ளார். பாரதியின் தோத்திரப் பாடற்களிற் பெரும்பாலானவை சக்திக்கு உரியன இப்பாடல் களிற் சக்தியின் பல்வேறு தோற்றங்களும் செயல்களும் சக்தியை வழிபடுமுறைகளும் சக்தி

வழிபாட்டினுற் பெறும் பல் வேறு பயன்களும் விரிவாகவும், தெளிவாகவும் தெரிவிக்கப் பெற்றுள்ளன. தேசீயம் சமுகம் பல்வகை சுயசரிதை கண்னன் பாட்டு பாஞ்சாலீ சபதம் குறபிற் பாட்டு ஆகிய ஏனைய பகுதிப் பாடல்களிலும் சக்தியைப் பற்றிய பகுதிகள் இடம் பெற்றுள்ளன - பாரதியார் உலகப் பொருள்களிலும், உயிர்களிலும், தெய்வங்களிலும், அனைத்து இயக்கங்களிலும் சக்தியையே கண்டார் உரைநடைப் பகுதிகளிலும் சக்தி, தர்மம், சாக்தமதம், நவராத்திரி வழிபாடு ஆகியவைகளைப் பற்றி எழுதி உள்ளார். பல இடங்களிற் தம்பெயரைச் சக்தி தாசன் என எழுதியுள்ளார் பாரதி சக்தியை வழிபட்டவர் என்பது இவைகளாற் தெளிவாகிறது.

கடவுளை ஆண் என்றும், பெண் என்றும் இரண்டு கலைகளாக வணங்குதல் புராதன தேசங்கள் யாவற்றிலுமே உண்டு சில இடங்களிலே சக்தியே பிரதானம் என்று கொள்கை இருந்தது. இயற்கைச் சக்தியே மகாதெய்வம் என்று சொல்லப் படுகிறது யோகிகளும், ஞானிகளும் கவிகளும் முத் தொழிலுக்கும் ஆதியான மோன ஒளி என அதனைப் போற்றினர் பௌதீக சாத்திரம் சக்தி தர்மத்திற்கு முதலாவது வேதம் தூலத்தை அறிந்தா லொழியச் சூக்குமத்தை நன்கு தெரிந்து கொள்ள முடியாது. நட்ச்சத்திரங்கள் அவளுடைய விழிகள் தீயும் காற்றும் அவளுடைய வேகம், மண் அவளுடைய திருமேனி இருப்பதெல்லாம் அவளுடைய கலைதான் உலகமே அவள் வடிவம் தாய், மனைவி, மகள், சகோதரி, பெண்கள் எல்லாம் பெண் தெய்வங்கள் பிதா சகோதரர், கணவன் மகன் ஆண்கள் எல்லாம் ஆண் தெய்வங்கள் சர்வ லோகங்களையும் பரமாத்மா சக்தி ரூபமாகநின்று இயங்கச் செய்வதால் நிர்க்குணமான பிரமத்தைச் சகுன நிலையில் ‘வன்பாலாகக் கருதி லோகமாதா எனப் போற்றுகின்றனர் பூர்வீக இந்து இராசாக்கள் காலத்தில் சாக்குமதம் மிகவும் உயர்வு பெற்றிருந்தது மகானய அமாவாசை என்பது யோகானுபவத்தில் இறப்புக்குப் பெயர் அதைத் தப்பிப் புதிய உயிர் கொண்டவுடன் பலநாள் இடைவிடாமல் பராசக்தியை உபாசனை செய்யவேண்டும் என்பதற்காகவே நவராத்திரி வழிபாடு நடைபெறுகிறது தவம், கல்வி தெய்வத்தைச் சரன் புகுதல். ஆகிய மூன்றும் கர்ம யோகம் இம் மூன்றையும் எப்போதும் செய்து கொண்டிருக்க முடியாத சாமனிய சனங்கள் நவராத்திரி ஒன்பது நாள் இரவும் பகலும் மேற்கூறிய நெறியில் நிலைபெறும் விதிகள் ஆகமங்களில் கூறப்பட்டன இச்சக்தியை வேண்டினுல் சக்தியைப் பெறலாம்.

தன் தேவைகளுக்கேயன்றிச் சமூகம் நாடு, உலகம் ஆகியவைகளின் தேவைகளுக்கும் கடவுளைப் பாரதியார் வேண்டுதல் செய்துள்ளார் என்பதை அவரது துதிப் பாடல்கள் பல உணர்த்துகின்றன தன்நன்மைகளிலும் பார்க்கச் சமூகம், நாடு, உலகம் ஆகியவைகளின் நன்மைகளையே மேலாக மதித்தார் என்பது தெளிவாகிறது. இவ்வகையில் மகாகவி பாரதியார் எங்களுக்கும் வழிகாட்டியுள்ளார் மகாகவி பாரதியின் மிக்க பெருமைகளுள் இதுவும் ஒன்றுகும் பாரதியைப் போல ஒருவர் முன்னும் பின்னும் இல்லை எனலாம் உலகுள்ளளவும் பாரதி இலக்கியம் வாழும்.

**வாழ்க பாரதி வளர்க சமயம்**

**ஓம் சிவ சக்தி ஓம்**

# PILOT SUPER

## GIVES YOU 7 CREDITS AND DISTINCTION IN WRITING STYLE

(1) Available in Blue, Black and Red with both fine and medium point and plastic neck............

(2) Visible ink supply, easy to see through transparent plastic body............

(3) The Pilot name ... ....a name that had stood for perfection in writing instruments for over half a century............

(4) Perfectly balanced construction, feels comfortable in your hands, even after hours of writing............

(5) Exclusive ribbed slip proof grip............

(6) Super stainless point reinforces ball for maximum support ...........

(7) Rugged, Tungsten Carbide Ball assures smooth, even writing with no skips or smudges............

REFILLS FREELY AVAILABLE

*Manufacturers :* **PENPALS LIMITED, COLOMBO.**
*Distributors ;* **SHAW WALLACE & HEDGES LTD.,**
**353, GALLE ROAD,**
**COLOMBO 3.**

PILOT

QUALIFYING GOOD WRITING

உய்வ தனைத்திலும் ஒன்ருய் - எங்கும்
ஓர் பொருளானது தெய்வம் — பாரதியார்

எமது

விளம்பரதாரர்களை

ஆதரியுங்கள்

With Good Wishes

CEYLON TOBACCO COMPANY LIMITED


இன்பங்கள் தூங்குவதில்லை
துன்பங்களும் அப்படித்தான் — சிந்தைலியிருந்து

# இசைக்கின்றேம் நன்றிஎனும் கீதம்

இளையோர் எமக்கெல்லாம் அருள் புரிந்த
இறைவா! உந்தனுக்கும்,
இனியதோர் மாலையிலே
இவ்வாண்டு விழாவதற்கு
இங்கிதமாய் அனுமதியை
இயைந்தளித்த அதிபர்க்கும்,
இவ்விழாவதனை
இடரின்றி நடத்திடவே
இளைக்காமல் உதவிட்ட ஆசிரியர்க்கும்,
இம்மலரை அச்சிட்ட
இம்பீரியல் அச்சகத்தார்க்கும்,
இம்மலரிற்கு இதழ்களென
இலங்குகின்ற ஆக்கங்களை
இல்லை என்றே கூறிடாது
இயன்றவரை அளித்திட்ட பெரியோர்க்கும்,
இனிய பல நிகழ்ச்சிகளை
இன் தமிழில் எமக்களித்த எல்லோர்க்கும்,
இறுதிவரை விழா இதனை,
இரசித்திட்ட உங்களுக்கும்
இம்மலரின் இதழ்களுக்கு விளம்பரங்கள் தந்தவர்க்கும்
இலைமறை காயாக இருந்தே எம்மவர்க்கு
இயன்றவரை உதவிட்ட அனைவருக்கும்
இசைக்கின்றோம் நன்றி என்னும் கீதம்!

**இணை இதழாசிரியர்கள்**
**இந்துமாணவர் மன்றம்**

Our Sincere Thanks

to

All our Well Wishers

&

Advertisers

*With Best Compliments from*

# COBAMILLS LTD.

★ GENERAL MERCHANTS

★ IMPORTERS & EXPORTERS

★ TENDER PROMOTERS

AUSTRALIA BUILDING

**YORK STREET**

**COLOMBO-1.**